www.tamilarangam.net

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2004

## அர்த்தமற்ற பொதுத் தேர்தலை நிராகரிப்போம்!
## அரசியல் அடிப்படையில் சிந்தித்துச் செயற்படுவோம்!

### புதிய- ஜனநாயக கட்சியின் அறைகூவல்!

* எதிர்வரும் பொதுத் தேர்தல் நான்கு ஆண்டு காலத்தில் நடாத்தப்படும் மூன்றாவது பொதுத் தேர்தலாகும். பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் எவ்வாறு வடக்கு கிழக்கு மக்கள் மீது யுத்தத்தைத் திணித்து ஆதாயம் பெற்றனரோ அவ்வாறே பாராளுமன்றப் பொதுத் தேர்தலையும் முழு நாட்டு மக்கள் மீதும் திணித்து தமது அதிகாரப் பசிக்கு இரை தேடி நிற்கின்றனர்.

* இத்தேர்தலால் நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகள், அரசாங்க-தனியார்-கூட்டுறவுத் துறை ஊழியர்கள், நடுத்தர வர்க்கத்தினர், தேசிய இனங்கள் உள்ளிட்ட ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு துளியளவும் நன்மை ஏற்படப்போவதில்லை.

* நாட்டின் இன்றைய பிரதான பிரச்சினையான தேசிய இனப் பிரச்சினைக்குரிய தீர்வு முயற்சிகளைக் குழப்பி, அதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் திசை திருப்பி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி – ஜே.வி.பி. கூட்டான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பாராளுமன்ற அதிகாரத்தில் இருத்தும் நோக்குடனேயே இத் தேர்தல் நடத்தப்படுகின்றது.

* இத் தேர்தல் தெற்கில் பேரினவாதக் கூச்சல்களும் பிரச்சாரங்களும் சிங்கள மக்கள் மத்தியில் மேலும் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கே வழி வகுத்து நிற்கின்றது.

* ஜனாதிபதியும் பிரதமரும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து புரிந்துணர்வுடன் இனப் பிரச்சினையின் தீர்வுக்கு பேச்சுவார்த்தை நடாத்தி இணக்கப்பாட்டிற்கு வருவதற்கான சந்தர்ப்பம் இருந்தும் இருவருமே அதனைத் தட்டிக் கழித்தனர். ஜனாதிபதி பாராளுமன்ற அதிகாரத்தின் மீதும் பிரதமர் அடுத்த ஜனாதிபதி பதவியின் மீதும் கண் வைத்து அதிகார மோகத்தில் செயற்பட்டதன் விளைவே இன்றைய பொதுத் தேர்தலாகும்.

* ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி –ஜே.வி.பி. கூட்டு ஒரு புறமாகவும் ஐக்கியத் தேசியக் கட்சி மறுபுறமாகவும் அணி வகுத்து நிற்கின்றன. இவ்விரு பேரினவாத ஆளும் வர்க்க கட்சிகளுக்குப் பின்னால் நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்க் கட்சிகள் நின்றும் வருகின்றன. இதனால் இக் கட்சிகள் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறி நிற்கும் தேசிய இனங்களின் சுதந்திரம், சுயநிர்ணய உரிமை, சுயாட்சி என்பன அச்சுறுத்தலையும் அபாயத்தையும் இத் தேர்தல் மூலம் எதிர் கொண்டு நிற்கின்றன.

* அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், யப்பான் ஆகியன ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னாலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி- ஜே.வி.பி. கூட்டின் பின்னால் இந்தியாவும் இருந்து தத்தமது கைங்கரியங்களை முடுக்கி வருகின்றன. இதனால் இலங்கையானது அமெரிக்க – இந்திய ஆதிக்கப் போட்டிகளின் பலிக் களமாக மாற்றப்பட்டுள்ளது. இதனை இத் தேர்தல் தெளிவாகக் காட்டுகிறது.

* இரண்டு பிரதான ஆளும் வர்க்கப் பேரினவாதக் கட்சிகளும் சமாதானம் பற்றி வெறும் வாய் உபசார சொற்றொடர்கள் வெளியிடுகின்றனவே தவிர சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வடக்குக் கிழக்கிற்கான சுயாட்சி பற்றிய தெளிவான திட்டவட்ட முன்மொழிவுகள் எதனையும் இத் தேர்தலில் முன்வைக்கவில்லை.

* அவ்வாறே அரசியல் நெருக்கடிக்கும் அதிகார இழுபறிகளுக்கும் காரணமான ஜனநாயக விரோத நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை ஒழிப்பதற்கும் உறுதியான வாக்குறுதியினை இரு கட்சிகளுமே இத்தேர்தலில் வழங்கவில்லை.

* நாட்டில் பெருகி வரும் வறுமை, வேலை இன்மை, வீடின்மை, சம்பளம் போதாமை, உற்பத்திகளுக்கு உரிய விலை கிடைக்காமை, அந்நியப் பொருட்களின் இறக்குமதி, சுகாதாரச் சீர்கேடு, கல்விச் சீர்குலைவு, சமூக பண்பாட்டுச் சீரழிவுகள் என்பனவற்றுக்கு இத் தேர்தலால் எவ்வித விமோசனமும் கிடைக்கப் போவதில்லை.

* அதிகரித்துச் செல்லும் பொருட்கள் மீதான விலைகள், கட்டண உயர்வுகள், வரி இறுப்புகளால் நாளாந்த துன்பங்களைச் சுமந்து நிற்கும் மக்களுக்கு இத்தேர்தலால் எவ்வித பலாபலனும் ஏற்படமாட்டாது. மேலும் மக்களின் பணத்திலிருந்து சுமார் நூறு கோடி ரூபாய்கள் அர்த்தமற்ற இத் தேர்தலுக்கு செலவிடப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



* நாட்டின் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்கள் அனைத்திலும் ஊடுருவி பெரும் நாசங்களை ஏற்படுத்தி வரும் தாராளமயம், தனியார் மயம், உலகமயமாதல் என்பனவற்றைத் தடுத்து நிறுத்தக்கூடிய எந்தவொரு திட்டமோ உத்தரவாதமோ ஆளும் அதிகார ஆதிக்க வர்க்க பிரதான கட்சிகளினால் முன்வைக்கப்படாத பொதுத் தேர்தலாகும்.

* கடந்த இருபது வருட கால விட்டுக் கொடுக்காத தமிழர் போராட்டத்தினால் ஏற்பட்ட பலாபலன்கள் இப்பொதுத் தேர்தலில் இனிப்புத் தடவிய முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயக வாக்குச் சீட்டின் மூலம் கையிழக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் உருவாகி உள்ளது. தோல்வி கண்ட பாராளுமன்றப் பேரம் பேசுதல் மீண்டும் அரங்கிற்கு வந்து விடுமோ என்ற சந்தேகம் இப்பொதுத் தேர்தலில் காண முடிகின்றது.

* வடக்கு கிழக்கு மக்களின் அன்றாட அவல நிலை தொடர்கிறது. இயல்பு வாழ்வும் ஜனநாயக- மனித உரிமைச் சூழலும் கேள்விக்குரியவையாகவே இருந்து வருகின்றன. இடம் பெயர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களும் லட்சக் கணக்கான மக்களும் தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பவும் தொழில் புரிந்து கொள்ளவும் முடியாது, அகதி வாழ்வையே வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறே இதுவரையான யுத்தத்தில் காணாமல் போனோர் பற்றி உரிய பதில் உரிய இடங்களில் இருந்து உரியவர்களுக்கு கிடைக்கவில்லை. இத்தகைய மக்களின் கண்ணீர் கதைகளுக்கும் வாழ்வுக்கும் இத்தேர்தலால் எவ்வித பதிலையும் வழங்க முடியாது.

ஆதலினால் ஆளும் வர்க்க அதிகாரப் போட்டிக்கும் அரசியல் ஆதிக்க இருப்புக்கும் இப்பொதுத் தேர்தல் ஒரு களமாகப் பயன்படுத்தப்படுகிறது. இரு பேரினவாதக் கட்சிகளும் நிலவுடமை முதலாளித்துவ வழி வந்த மேட்டுக்குடி ஆளும் அதிகார வர்க்கக் கட்சிகளேயாகும். இக் கட்சிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏனைய கட்சிகள் அணி பிரிந்து துணை நின்று தத்தமது சொத்து சுகபோக வர்க்க நலன்களைப் பேணிக் கொள்கின்றன. இத்தகைய கட்சிகள் பொதுப்படையாக இனம், மதம், மொழி, பிரதேசம் எனப் பேசினாலும் உழைக்கும் மக்களின் அடிப்படையான அபிலாஷைகள் பற்றி அக்கறைக் காட்டுவதில்லை. வர்க்க, இன, சாதிய, பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளின் உண்மைகளையும் யதார்த்தங்களையும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. சுரண்டலையும் ஒடுக்குமுறைகளையும் அந்நிய ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளின் ஊடுருவல்களையும் எதிர்க்கத் தயாரில்லாத கட்சிகளாகவே இருந்தும் வருகின்றன. இவர்கள் முதலாளித்துவ பாராளுமன்றத்தின் மூலம் ஆளும் அதிகார ஆதிக்க வர்க்க சக்திகளுக்குத் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர். இதனை இத்தேர்தலின் மூலமும் தொடர்கின்றனர். பாராளுமன்ற ஜனநாயகம் என்பது பெருமுதலாளித்துவ பேரினவாத மேட்டுக்குடிகளுக்கும் அவர்களுக்குத் துணை நிற்கும் ஏகாதிபத்திய சக்திகளுக்கும் சேவை புரியும் ஒன்று என்பது இப்போது அப்பட்டமாகி நிற்கின்றது. ஆனால் மக்கள் பல்வேறு வகைப்பட்ட பிரசாரங்களில் ஏமாற்றப்படுகின்றனர். இப்பொதுத் தேர்தலில் இவை மேலும் தெளிவாகக் காணப்படுகின்றன.

இந்நிலையில் எமது புதிய ஜனநாயகக் கட்சி எவ்வித அர்த்தமும் அற்ற இப்பொதுத் தேர்தலில் பங்குகொள்ளவில்லை. கடந்த இரண்டு தேர்தல்களிலும் ஜனநாயக விரோதச் சூழல், நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள் மத்தியில் போட்டியிட்டு மக்களுக்கு கூற வேண்டியவற்றைக் கூறி நின்றோம். எமது கொள்கைகளை எடுத்துக் கூறுவதற்கு தகுந்த மேடையாகவும் பயன்படுத்தினோம். ஆனால் வருடாந்த திருவிழா போன்று ஆளும் வர்க்க சக்திகளால் அவர்களின் தேவைக்காக நடாத்தப்படும் பயனற்ற இத்தேர்தலில் எமது கட்சி பங்குகொள்ளவில்லை.

அதேவேளை மேற்கூறப்பட்டவற்றின் உண்மைகளை மக்கள் அரசியல் ரீதியில் சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். இப்பொதுத் தேர்தலின் வாக்குச் சீட்டைச் செல்லுபடியற்றதாக்கி தமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை எமது கட்சி விடுக்கின்றது.

# எதிர்வரும் பொதுத் தேர்தலை நிராகரிப்போம்.
# வாக்குச் சீட்டுகளை செல்லுபடியற்றதாக்குவோம்.

**புதிய - ஜனநாயகக் கட்சி**

407, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்